முருகப்பெருமான் துணை

**மகான் உருத்திரபசுபதி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.07.2022, வெள்ளிக்கிழமை

1. ஆனந்த ஞான வடிவான
ஆறுமுகனார் அவதாரமான
ஞான வள்ளலே அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது மிதுனதிங்கள்
தெரிவிக்க மூவைபீர் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 17 நாள், 01.07.2022 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு உருத்திரபசுபதி நாயனார் யானும்
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உயர் நெறி சன்மார்க்கமாம்
ஞானமதை மக்கள் அடைந்திட
நன்னடத்தை நம்பிக்கை பெருகி
4. பெருகியே அநீதிகளை விரட்டும்
பிரணவ பிரம்ம சக்திகளும்
தரும ஞானி அரங்க மகான்
தயவால் ஆசியால் கிட்டும்
5. கிட்டவே சன்மார்க்கம் எனும்
குருமார்க்கம் ஏற்று வந்திட
தட்டாது எல்லா ஞானிகளும்
தானாக வந்து அருள்புரிவர்
6. அருளுடன் பொருள் வளமும்
ஆபத்தை வெல்லும் பலமும்
இருளான எல்லா மாயையும்
எளிதில் வெல்லும் ஆற்றலும்
7. ஆற்றலும் அரங்கனால் அடைவர்
அற்புதம் படைக்க வந்த
மாற்றம் நிகழ்த்த வந்த
மாதவசியே அரங்கன் எனும்
8. எனும் ஞானத் தெளிவும்
எல்லாமே குருவருள் எனும்
ஞானமும் சமாதான பலமும்
நல்ல சிந்தை சாந்தி நிலையும்
9. நிலைகொண்டு தருமத்துக்கும்
நீதிக்கும் பெருந்துணையாக
சளைக்கா நிற்கும் சக்தியாக
சற்குருவின் ஞானப் படைகளாக

10. ஆகவே அடையாளம் கூடி
அரங்கமகான் வழிதன்னில்
செகத்தார் ஞானிகள் ஆவர்
செகத்தினை மாற்றம் செய்து

11. செய்துமே ஞான ஆட்சி
சேவை நிறைந்த ஞானிகள் ஆட்சி
அய்யமிலா நடத்தி சிறப்பர்
அறிவித்த அருளாசி முற்றே

—சுபம்—